8. அறிவிப்பு.

கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ்நாடு 1980-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்ட முன்வடிவை பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி)

(இ) கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1980-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 13/1980) *ஆய்வுக்கு எடுத்துக்கொளளப்பெற வேண்டும்'' என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றன.

பிரிவுகள் 2 முதல் 13 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1980-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1980) நிறைவேற்றப் பெற வேண்டும்'' என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

---

* 1980-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 8-ம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப்பெற்றுள்ளது].